265—

ஒருங்கிணைந்த அலுவலக வளாகம்

*20117—**திரு. ப. தன்சிங்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் கண்டோன்மென்ட் பகுதி புல எண் 769-ல் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் கண்டோன்மென்ட், புல எண் 769-ல் விஸ்தீரணம் 0.38.5 ஹெக்டேர் நிலம், கிராமக் கணக்குகளில் கண்டோன்மென்ட் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி நிலம் மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ளதாலும், மேற்படி புல எண்ணில் ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் அமைத்திட வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.*

திரு. ப. தன்சிங்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் வருவாய்த் துறைக்குச் சொந்தமானது. ஏற்கெனவே, அங்கே அங்கன்வாடி மையமும், வியாபாரிகள் சங்க வளாகமும் கட்டப்பட்டுள்ளன. எனவே, மக்களின் நலன் காப்பதில் இந்தியாவிலேயே ஒப்பாரும், மிக்காரும் இல்லாத வகையில், ஆட்சி புரிந்துவரும் பொன்னியின் செல்வி, நாளைய பாரதத்தின் விடிவெள்ளி (மேசையைத் தட்டும் ஒலி) உலகமே வியந்து பாராட்டிப் போற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர், என்னுடைய குடும்பத் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் உள்ள அரசு பல்லாவரம் தொகுதி மக்களின்*

நன்மையைக் கருதி, மீண்டும் ஒருமுறை பரிசீலனை செய்து அங்கே ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குக்கீழே இருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே ஒரு மாவட்டம் புதிதாக அமைக்கப்படுகிறபோது, அந்த மாவட்டத்தினுடைய பல்வேறு அலுவலகங்களும் மக்கள் தங்கள் தேவைகளுக்காக ஒவ்வொரு அலுவலகமாக ஏறி, இறங்கக்கூடிய சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்கிற எண்ணத்திலும், பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய போக்குவரத்து சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்கிற எண்ணத்திலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மூன்றாவது முறையாகத் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னாலே, திருப்பூர் மாவட்டத்தை அறிவித்தபோதே, மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாக அலுவலகத்தை 34 துறை அலுவலகங்களும் ஒரே இடத்திலே அமையக்கூடிய அளவிலே, 103 கோடி ரூபாய் செலவிலே, மிகப் பெரிய ஒரு திட்டத்தை திருப்பூர் மாவட்டத்திலே துவக்கி வைத்தார்கள். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, ஆலந்தூர் வட்டம், பல்லாவரம் தொகுதியைப் பொறுத்தவரையிலே, அரசுத் துறை அலுவலகங்களுடைய கட்டடங்கள் பொதுவாக நல்ல முறையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற பகுதி, கண்டோன்மென்ட் பல்லாவரம் பகுதியானது அரசினுடைய வருவாய்த் துறைக் குறிப்பிலே, கண்டோன்மென்ட் பகுதியென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காணத்தினாலே, தேவைப்படுகிறபட்சத்தில், மாற்று இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறுவார்களேயானால், மாவட்ட ஆட்சியரின் கருத்தினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 18]

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.*

திரு. ப. தன்சிங்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல திட்டங்களை அறிவித்துக்கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையில், பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

266—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

8867*—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஏற்கெனவே பெறப்பட்ட கருத்துருவில் வாய்ப்பில்லையென்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடனும், பரிவுடனும் பரிசீலனை செய்து, 2013-2014 ஆம் கல்வியாண்டில் பெறப்பட்ட கருத்துருவில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட 4-4-2013 ஆம் நாளிட்ட கருத்துருவில் அறிவிக்கப்பட்டுள்ளது. வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம்,